# நமது தின கனி


காலை நாளிதழ்

# NAMADHU DHINA KANI

Daily Morning

| Vol: 02 | Issue: 5 | 4 Pages | 5.8.2024 | Monday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825 | Tiruppur |
|---|---|---|---|---|---|---|---|
| மலர்: 02 | இதழ்: 5 | 4 பக்கங்கள் | 5.8.2024 | திங்கட்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825 | திருப்பூர் |


## லெபனானில் இருந்து உடனடியாக வெளியேறுங்கள்: தங்கள் நாட்டு மக்களுக்கு அமெரிக்கா, இங்கிலாந்து அறிவுறுத்தல்




காசா, ஆக. 5

காசா மீது இஸ்ரேல் தாக்குதல் நடத்தி வருவதால் பாலஸ்தீன மக்களுக்கு ஆதரவாகவும், ஹமாஸ் அமைப்பினருக்கு ஆதரவாகவும் இஸ்ரேல் அண்டை நாடான லெபனானில் உள்ள ஹிஸ்புல்லா அமைப்பினர் இஸ்ரேல் மீது தாக்குதல் நடத்தி வருகின்றனர். ஹிஸ்புல்லா அமைப்பை ஈரான் பின்புறத்தில் இருந்து இயக்கி வருகிறது.

இந்த வார தொடக்கத்தில் ஹமாஸ் அமைப்பின் தலைவர் இஸ்மாயில் ஹனியே ஈரான் நாட்டில் வைத்து படுகொலை செய்யப்பட்டார். இந்த படுகொலைக்கு இஸ்ரேல்தான் காரணம் என ஈரான் நம்புகிறது. இதனால் இஸ்ரேல் மீது நேரடி தாக்குதல் நடத்த ஈரான் உயர் அதிகாரம் படைத்த தலைவர் அயதுல்லா அலி காமேனி உத்தரவிட்டுள்ளார். மேலும் இஸ்ரேல் தாக்குதலில் ஹிஸ்புல்லா கமாண்டர் கொல்லப்பட்டுள்ளார்.

இதனால் ஹிஸ்புல்லா இஸ்ரேல் மீது பயங்கரமான தாக்குதலை நடத்தும் என எதிர்பார்க்கப்படுகிறது. இதனால் போர் அபாயம் ஏற்பட்டுள்ளது. இந்த போர் கிழக்கு மத்திய பகுதியில் விரிவடையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த நிலையில் லெபனானில் வசிக்கும் அமெரிக்க மக்கள், இங்கிலாந்து மக்கள் உடனடியாக அங்கிருந்து வெளிறும்படி இருநாட்டு தூதரகங்கள் கேட்டுக்கொண்டுள்ளனர். போர் ஏற்படும் அபாயம் ஏற்பட்டுள்ளதால் சில விமானங்கள் ரத்து செய்யப்பட்டுள்ளது.

இதனால் எந்தவொரு விமானம் கிடைத்தாலும் டிக்கெட் புக் செய்து லெபனானில் இருந்து வெளியேறும்படி கேட்டுக்கொண்டுள்ளது.

"லெபனானில் இருந்து புறப்பட விரும்புபவர்கள், அந்த விமானம் உடனடியாகப் புறப்படாவிட்டாலும் அல்லது அவர்களின் முதல் விருப்ப வழியைப் பின்பற்றாவிட்டாலும் அவர்களுக்குக் கிடைக்கும் டிக்கெட்டை முன்பதிவு செய்யுமாறு நாங்கள் ஊக்குவிக்கிறோம்" என லெபனான் பெய்ரூட்டில் உள்ள அமெரிக்க தூதரகம் தெரிவித்துள்ளது.

இஸ்ரேல் மீது ஈரான் தாக்குதல் நடத்தக்கூடும் என்பதால் அமெரிக்கா போர்க்கப்பலை அனுப்பியுள்ளது. அதிகமான வீரர்களையும் மத்திய கிழக்குப் பகுதியில் குவித்துள்ளது.

## செப்டம்பர் 4ந்தேதி கமலா ஹாரிஸ் உடன் விவாதம் நடத்த தயார்: டொனால்டு டிரம்ப்



அமெரிக்கா, ஆக. 5

அமெரிக்க அதிபர் பதவிக்கான தேர்தல் வருகிற நவம்பர் மாதம் 5ந்தேதி நடக்க உள்ளது. இதில் குடியரசு கட்சி சார்பில் முன்னாள் அதிபர் டொனால்டு டிரம்ப் (வயது 78) போட்டியிடுவது உறுதியாகி உள்ளது. அவரை எதிர்த்து ஆளும் ஜனநாயக கட்சி சார்பில் அதிபர் ஜோ பைடன் (வயது 81) போட்டியிடுவதாக அறிவிக்கப்பட்டிருந்தது.

ஆனால், தேர்தல் விவாத நிகழ்ச்சியில் டிரம்ப்ன் கேள்விகளுக்குப் பதிலளிக்க முடியாமல் ஜோ பைடன் திணறினார். வேட்பாளரை மாற்ற கட்சியில் பல தலைவர்கள் போர்க்கொடி தூக்கினர். இதையடுத்து அதிபர் பதவிக்கான போட்டியில் இருந்து விலகுவதாக ஜோ பைடன் அறிவித்தார்.

துணை அதிபர் கமலா ஹாரிஸை (வயது 59) ஜனநாயக கட்சி சார்பில் அதிபர் வேட்பாளராக பரிந்துரை செய்தார். அவர் மட்டுமே ஜனநாயக கட்சியில் வேட்பாளராக உள்ளதால் அதிகாரப்பூர்வ வேட்பாளராக அறிவிக்கப்படுவதற்கான ஆதரவை பெற்றுள்ளார். விரைவில் வேட்புமனு தாக்கல் செய்து கட்சி பொதுக்கூட்டத்தில் டிரம்ப்ஐ எதிர்த்து போட்டியிடும் வேட்பாளராக அறிவிக்கப்பட இருக்கிறார்.

ஜனநாயக கட்சி சார்பில் கமலா ஹாரிஸ் போட்டியிடுவது ஏறக்குறைய உறுதியான நிலையில், பாக்ஸ் நியூஸ் செய்தி நிறுவனத்துடன் கமலா ஹாரிஸ் உடன் நேரடி விவாதத்தில் பங்கேற்க ஒப்புக்கொண்டுள்ளார். செப்டம்பர் 4ந்தேதி நேருக்கு நேர் விவாதம் நடத்த தயார் எனத் தெரிவித்துள்ளார்.

ஆனால் டிரம்ப் விவாதம் நடத்த ஒப்புக் கொண்ட நிலையில் கமலா ஹாரிஸ் ஒப்புக்கொண்டாரா? என்பது தெரியவில்லை.

முன்னதாக கமலா ஹாரிஸை எளிதில் வெற்றி கொள்வேன் என டிரம்ப் கூறி வருகிறார். மேலும் இவ்வளவு காலம் இந்தியர் என்று கூறி வந்தவர், இப்போது கருப்பர் என தன்னை அடையாளப்படுத்துகிறார் என விமர்சனம் செய்துள்ளார்.

## சோமாலியாவில் சோகம்: ஓட்டலில் புகுந்து பயங்கரவாதிகள் நடத்திய தாக்குதலில் 32 பேர் பலி



மொகடிசு: ஆக. 5

கிழக்கு ஆப்பிரிக்க நாடான சோமாலியாவில் அல்கொய்தாவின் கிளை அமைப்பான அல் ஷபாப் மற்றும் ஐ.எஸ். போன்ற பயங்கரவாத குழுக்கள் செயல்பட்டு வருகின்றன. இந்த பயங்கரவாத குழுக்களை அழிக்கும் பணிகளில் அந்நாட்டு பாதுகாப்புப் படை ஈடுபட்டு வருகிறது.

ஆனாலும், இந்த பயங்கரவாத குழுக்கள் பொதுமக்கள் மற்றும் பாதுகாப்புப் படையினரைக் குறிவைத்து அவ்வப்போது தாக்குதல் நடத்தி வருகின்றன.

இந்நிலையில், சோமாலியா தலைநகர் மொகடிசுவில் உள்ள லிடோ கடற்கரை அருகே அமைந்துள்ள பிரபல ஓட்டலுக்குள் அல் ஷபாப் பயங்கரவாதிகள் திடீரென உள்ளே புகுந்தனர். அவர்கள் ஓட்டலில் இருந்தவர்கள் மீது சரமாரி துப்பாக்கிச் சூடு நடத்தினர். மேலும் சிலரை பிணைக்கைதிகளாக சிறைபிடித்தனர்.

தொடர்ந்து, தங்கள் உடலில் மறைத்து கட்டிக்கொண்டு வந்த வெடிகுண்டுகளை வெடிக்கச் செய்து தற்கொலைப்படை தாக்குதல் நடத்தினர்.

இந்தக் கொடூர தாக்குதலில் 32 பேர் பரிதாபமாக உயிரிழந்தனர். மேலும், 60க்கும் மேற்பட்டோர் படுகாயம் அடைந்தனர்.

தகவலறிந்து அங்கு வந்த பாதுகாப்புப் படையினர் அதிரடியாக செயல்பட்டு பிணைக்கைதிகளை மீட்டனர். மேலும், தாக்குதல் நடத்திய பயங்கரவாதிகள் சுட்டுக் கொல்லப்பட்டதாக பாதுகாப்புப் படை தெரிவித்துள்ளது.

# நிவாரணப் பணிகளுக்கு ரூ.5 கோடி: முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு பினராயி விஜயன் நன்றி



திருவனந்தபுரம், ஆக. 5

கேரள மாநிலம் வயநாடு மாவட்டத்தில் கடந்த மாதம் 30ந் தேதி பயங்கர நிலச்சரிவு ஏற்பட்டது. இதில் பூஞ்சிரித்தோடு, முண்டக்கை, சூரல்மலை, அட்டமலை ஆகிய கிராமங்கள் சின்னாபின்ன மாகின. நிலச்சரிவில் சிக்கி இதுவரை பலியானவர்கள் எண்ணிக்கை 357ஆக உயர்ந்துள்ளது. இன்னும் 200 பேரை கண்டறிய முடியவில்லை என்பதால் மீட்பு பணிகள் தொடர்ந்து 6வது நாளாக இன்றும் நீடித்து வருகிறது. இதற்கிடையில், வயநாடு நிலச்சரிவு நிவாரண பணிகளுக்கு கேரள அரசுக்கு, தமிழ்நாடு அரசின் சார்பில் முதல்அமைச்சரின் பொது நிவாரண நிதியில் இருந்து ரூ,5 கோடி வழங்கப்பட்டது. 5 கோடி க்கான காசோலையை நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுக ங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு, கேரள மாநில முதல்மந்திரி பினராயிவிஜயனிடம் நேரில் வழங்கினார். இந்த நிலையில், நிவாரணப் பணிகளுக்காக ரூ.5 கோடி வழங்கிய தமிழ்நாடு முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலினுக்கு கேரள முதல்மந்திரி பினராயி விஜயன் நன்றி தெரிவித்துள்ளார். இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிப்பில், "நிலச்சரிவால் பாதிக்கப்பட்ட வயநாட்டில் நிவாரணப் பணிகளுக்கு ரூ.5 கோடி தாராளமாக வழங்கிய தமிழக அரசு, முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலினுக்கு மனமார்ந்த நன்றிகள். உங்களின் ஆதரவும், ஒற்றுமையும் மிகவும் பாராட்டப்பட்டதுடன், மறுவாழ்வு மற்றும் மறுகட்டமைப்பு முயற்சிகளுக்கு பெரிதும் உதவும்" என்று தெரிவித்துள்ளார்.

# தென்சென்னை மேற்கு மாவட்ட காங்கிரஸ் கமிட்டி சார்பில் செயல்வீரர்கள் மற்றும் கலந்தாய்வு கூட்டம்

சென்னை,ஆக.5

தென்சென்னைமேற்குமாவட்ட காங்கிரஸ் கமிட்டி செயல்வீரர்கள் மற்றும் கலந்தாய்வு கூட்டம் சென்னை அம்பத்தூர் எச்.பி.எம். பேரடைஸ் திருமண மண்டபத்தில் நாளை மாலை 4 மணி–யளவில் நடைபெறுகிறது.

கூட்டத்தில், தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி தலைவர் கு.செல்வப்பெருந்தகை கலந்து கொண்டு சிறப்புரையாற்றுகிறார்.

தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி துணைத் தலைவர் டி.என்.முருகானந்தம் தலைமை தாங்குகிறார். மாநில பொதுச்செயலாளர் இல.பாஸ்கரன்வரவேற்புரை ஆற்றுகிறார்.

தமிழக காங்கிரஸ் பொதுக்குழு உறுப்பினர் டி.டி.அய்யம்பெருமாள், மாநில பொதுச்செய–லாளர்கள் தளபதி பாஸ்கர், பி.வி.தமிழ் செல்வன், மற்றும் வளசை ஜெ.பால–முருகன், எச்.பீர்முகம்மது, கவுன்சிலர் கே.வி.திலகர், எம்.சுரேஷ்குமார் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர். இதில், அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி செயலா–ளர் சி.டி.மெய்யப்பன், காங்கிரஸ் சட்டமன்ற கட்சித் தலைவர் எஸ்.ராஜேஷ் குமார், முன்னாள் எம்.பி., ஜெ.எம்.ஆரூண், மாநில பொதுச்செயலா–ளர்கள் டி.செல்வம், கே.தணிகாசலம், அருள்–பெத்தையா, மாநில துணை தலைவர் சொர்ணா சேது–ராமன், மாநில அமைப்பு செயலாளர் எஸ்.ராம்மோகன், மகளிர் காங்கிரஸ் தலைவர் ஹசீனா சையத், ஓ.பி.சி.பிரிவு தலைவர் டி.என்.நவீன், சர்க்கிள் தலைவர்கள் இரா.மோகனரங்கன், டி.லோகா –பிராம், இ.மோகன் குமார், பி.ரோமியோ, ஏ.என்.பச்சையப்பன், எம்.எம்.முருகன், எம்.ஜி.முரளி, ஜெ.ஜெகன்,ஜி.எஸ்.ஜெயகுமார், டி.மோகன் பாபு, ஜி.எஸ்.குணசீலன், வி.ரமேஷ், ஏ.வி.தனசேகர், என்.கோபாலகிருஷ்ணன், ஏ.என்.பன்னீர்செல்வம், எஸ்.சுரேஷ் உள்ளிட்ட பலர் கலந்து கொள்கிறார்கள்.

# கர்நாடகா அரசிடம் அமைச்சர் துரைமுருகன் கை நீட்டி பணம் வாங்கிவிட்டாரோ..? அண்ணாமலை சந்தேகம்

ஈரோடு, ஆக. 5

சுதந்திரப்போராட்ட வீரர் தீரன் சின்னமலையின்சிலைக்குமாலை அணிவித்து மரியாதை செலுத்திய பா.ஜனதா மாநிலத்தலைவர் அண்ணாமலை ஈரோட்டில் செய்தியாளர்களை சந்தித்தார்.

அப்போது பேசிய அவர், "மேகதாது பகுதியில் அணை கட்டியே தீருவோம், இந்த விவகாரத்தில் தமிழக அரசுடன் பேச்சுவார்த்தைக்கே இடம் இல்லை என கர்நாடகா மாநில துணைமுதல்மந்திரி தெரிவித்துள்ளார்.

இதற்கு தி.மு.க. அமைச்சர்கள் உள்பட தி.மு.க. நிர்வாகிகள் ஒருவர் கூட ஒரு கண்டன அறிக்கையை கூட வெளியிடாமல் இருப்பது சந்தேகத்தை ஏற்படுத்துகிறது. காவிரியில் தமிழகத்திற்கான நீரை திறந்துவிட மாட்டோம் என கர்நாடகா தொடர்ந்து விடாப்பிடியாக இருந்து வந்தது. ஆனால் தற்போது மழை பெய்ததால் இந்த பிரச்சினையை மக்கள் மறந்துள்ளனர்.



மேகதாது அணை அமைக்க கர்நாடகா முயற்சிப்பதற்கு மத்திய அரசின் மீது சந்தேகமாக உள்ளது என அமைச்சர் துரைமுருகன் கூறுகிறார். எனக்கும் மூத்த அமைச்சரான துரைமுருகன் மீதும் ஒரு சந்தேகம் வருகிறது. அவர் கர்நாடகா காங்கிரஸ் அரசிடம் கை நீட்டி பணம் வாங்கிவிட்டாரோ? என்று சந்தேகம் எழுகிறது. கர்நாடகா காங்கிரஸ்அரசுகுறித்துதி.மு.க. அரசோ, அமைச்சர்களோ ஒரு வார்த்தை கூட பேசவில்லை. அதனால்தான் சந்தேகமாக உள்ளது என்கிறேன். சிவகுமார், சித்தராமையாவை எதிர்க்கும் தைரியமில்லை. எதிர்த்து அறிக்கை விடவில்லை. அவர்கள் செய்வது தவறு என தெரிந்தும், வாய் திறந்து பேசவில்லை" என்று அவர் கூறினார்.

# 'சூழ்நிலை மாறாத வரை அ.தி.மு.க.வுடன் இணைய மாட்டோம்' டி.டி.வி.தினகரன்



சென்னை, ஆக. 5

சென்னைகிண்டியில்அ.ம.மு.க. பொதுச்செயலாளர் டி.டி.வி. தினகரன் இன்று செய்தியாளர்களை சந்தித்து பேசினார். அப்போது அவர் கூறியதாவது;

"அ.ம.மு.க. கட்சி ஆரம்பிக்கப்பட்டு 7 ஆண்டுகள் ஆகின்றன. நாங்கள் எந்த சூழ்நிலையில், எந்த காரணத்திற்காக இந்த கட்சியை ஆரம்பித்தோமோ, அதில் எந்த மாற்றமும் நடக்காத வரை, அ.தி.மு.க.வுடன் இணைவது என்ற பேச்சுக்கே இடமில்லை. அ.தி.மு.க.வின் தோல்விக்கு எடப்பாடி பழனிசாமிதான் காரணம். தொண்டர்கள் ஒன்று சேர்ந்து அவரை விரட்டும் காலம் விரைவில் வரும்." இவ்வாறு டி.டி.வி. தினகரன் தெரிவித்தார்.

# கிரிக்கெட்டில் இலங்கை தோற்றதால் தமிழக மீனவர்கள் மீது தாக்குதல்: ஜெயக்குமார் ஆவேசம்



சென்னை, ஆக. 5

முன்னாள் அமைச்சர் ஜெயக்குமார் சென்னையில் செய்தியாளர்களிடம் பேசியதாவது;

"கிரிக்கெட் போட்டியில் இலங்கை அணி தோற்றது என்ற ஒரே காரணத்திற்காக தமிழகத்தைச் சேர்ந்த மீனவர்கள் மீது இலங்கை கடற்படையினர் கப்பலை மோதி இனவெறியோடு தாக்குதல் நடத்தியுள்ளனர்.

மீனவர்கள் விவகாரத்தில் மத்திய, மாநில அரசுகள் வாய்மூடி மவுனமாக இருப்பது ஏன்? மீனவர்களை காக்க மத்திய, மாநில அரசுகள் தவறிவிட்டன. இது மிகவும் கண்டிக்கத்தக்கது."

இவ்வாறு ஜெயக்குமார் தெரிவித்தார்.

# திண்டுக்கல்லில் பைக் மீது கார் மோதியதில் 4 பேர் பலி

திண்டுக்கல், ஆக. 5

திண்டுக்கல் அருகே உள்ள ரெண்டலப்பாறையை சேர்ந்தவர் ஜார்ஜ் (வயது 30). எலக்ட்ரீசியனாக வேலை பார்த்து வந்தார். இவரது மனைவி அருணா (28). இவர்களுக்கு ரக்ஷிதா (7) என்ற மகளும், ரக்ஷன் (5) என்ற மகனும் உள்ளனர். இன்று அருணாவின் தாய் சரோஜாதேவி (60) என்பவருக்கு உடல்நிலை பாதிக்கப்பட்டதால் அவரை மோட்டார்சைக்கிளில் ஏற்றிக்கொண்டு ஜார்ஜ் தனது குடும்பத்தினருடன் திண்டுக்கல்நத்தம் சாலையில் வந்து கொண்டிருந்தார்.

நல்லாம்பட்டி அருகே இவர்கள் வந்து கொண்டிருந்த போது எதிரில் நத்தம் நோக்கி வந்த ஒரு கார் கண்ணிமைக்கும் நேரத்தில் ஜார்ஜ் மோட்டார் சைக்கிள் மீது மோதி சுமார் 100 மீட்டர் தூரம் இழுத்துச் சென்றது. அப்போது மற்றொரு பைக்கில் வந்த நொச்சிஓடைப்பட்டியை சேர்ந்த குழந்தைசாமி என்பவர் மீதும் மோதியது. இதில் ஜார்ஜ், அருணா, அவரது 2 குழந்தைகள் ஆகியோர் சம்பவ இடத்திலேயே துடிதுடித்து ரத்த வெள்ளத்தில் உயிரிழந்தனர்.

இதைப்பார்த்த அப்பகுதி மக்கள் காரை ஓட்டி வந்த நபரை சுற்றி வளைத்து பிடித்தனர். இது குறித்து திண்டுக்கல் தாலுகா போலீசாருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது. போலீசார் சம்பவ இடத்திற்கு வந்து பலியான 4 பேர் உடல்களை மீட்டு பிரேத பரிசோதனைக்காக திண்டுக்கல் அரசு ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைத்தனர். மேலும் காயமடைந்த சரோஜாதேவி உள்பட 3 பேரையும் மீட்டு சிகிச்சைக்காக அனுப்பி வைத்தனர்.

இந்த விபத்தால் அப்பகுதியில் சிறிது நேரம் போக்குவரத்து பாதிக்கப்பட்டது. ஒரே பைக்கில் 5 பேர் வந்ததால் கார் மோதிய வேகத்தில் பைக்கை நிறுத்த முடியாமல் விபத்தில் அவர்கள் சிக்கிக்கொண்டது அங்கிருந்தவர்களை அதிர்ச்சியடைய வைத்தது. மேலும் ஒரே குடும்பத்தில் 4 பேர் பலியானசம்பவம் பெரும் சோகத்தை ஏற்படுத்தி உள்ளது.

# காவிரி ஆற்றில் கூட்டம் கூட்டமாக நீந்திச்செல்லும் நீர்நாய்கள்

வேலூர், ஆக. 5



தமிழக நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் காட்பாடி தாலுகா சேனூர் கிராமத்தில்நிருபர்களிடம் கூறியதாவது:

தமிழகமும் கர்நாடகாவும் மேகதாது அணை விவகாரத்தில் 38 முறை பேசியும் சுமுக தீர்வு ஏற்படவில்லை. இதனால் நடுவர் மன்றம் சென்றோம். நேரடியாக பட்டேலும், கருணாநிதியும், பிரதமராக இருந்த தேவேகவுடாவும் பேசியும் அப்போதே நடக்கவில்லை.

பேச்சால் இதற்கு தீர்வில்லை என நாங்கள் அறிவித்த பின்னர் அப்போது பிரதமர் வி.பி.சிங் நடுவர் மன்றம் அமைத்தார். நாங்கள் சுப்ரீம் கோர்ட்டில் இது தொடர்பாக வழக்கு தொடர்ந்துள்ளோம்.

மறுபடியும் சென்று பேசினால் என்ன ஆகும் என கேட்டால் எல்லா வழக்கிலும் ஒன்றை கர்நாடகா கூறுவார்கள். பேசி தீர்க்கிறோம் என்றால் அது பிரச்சனைக்கு தீர்வாகாது.

தென்பெண்ணை ஆற்றில் மார்கண்டேயன் அணை கட்டுகிறார்கள். அதற்கும் நாம் நடுவர் மன்றம் கேட்டோம் ஆனால் அவர்கள் 2 ஆண்டுகளாகியும் இன்னும் பேசவில்லை. பேச்சுவார்த்தை மூலம்தீர்த்துகொள்ளலாம் என்பது தற்கொலைக்கு சமம். கனிமவளத்திற்கு மாநில அரசே வரி விதிக்கலாம் என உச்சநீதிமன்றம் கூறியுள்ளது வரவேற்கதக்கது. இதுகுறித்து முதல்அமைச்சர் மு க ஸ்டாலின் விரைவில் முடிவு எடுப்பார். அருந்ததியர் உள் இட ஒதுக்கீடு செல்லும் என உச்சநீதிமன்றம் கூறியுள்ளது. நாங்கள், செல்லும் என கூறியதை தான் அறிவித்தோம்.

வயநாடு விவகாரத்தில் உள்துறைமந்திரிஅமித்ஷா என்ன சொன்னார் என்பதை பினராயி விஜயன் படிக்கிறார். 'வரலாம் வெள்ளம் என சொல்லி உள்ளனர், அதில் பிரளயம் ஏற்படும் என கூறவில்லை'. இதில் பினராயி விஜயன் சொல்வதுதான் உண்மை.

இவ்வாறு அவர் கூறினார்.

# மழை குறைந்ததால் முல்லைப்பெரியாறு அணை நீர்மட்டம் 136 அடியாக உயர்வதில் சிக்கல்

கூடலூர், ஆக. 5



கேரளாவில்பருவமழை தீவிரம் அடைந்ததால் இடுக்கி மாவட்டத்தில் கனமழை பெய்தது. நீர்பிடிப்பு பகுதியில் பெய்த தொடர் மழையால் முல்லைப்பெரியாறு அணைக்கு நீர்வரத்து அதிகரித்தது. இதனால் அணையின் நீர்மட்டமும் வேகமாக உயர்ந்தது.

இந்த நிலையில் தற்போது மழை குறைந்துள்ளதால், அணைக்கு நீர்வரத்தும் சரிந்துள்ளது. அணையின் நீர்மட்டம் 131.55 அடியாக உள்ள நிலையில் வரத்து 2483 கன அடியாக குறைந்துள்ளது. அணையில் இருந்து தமிழக பகுதிக்கு 1400 கன அடி நீர் திறக்கப்படுகிறது. அணையில் 5059 மி.கன அடி நீர் இருப்பு உள்ளது.

கனமழை பெய்ததால் முல்லைப்பெரியாறு அணையின் நீர்மட்டம் 136 அடி வரை உயரும் என விவசாயிகள் எதிர்பார்த்திருந்தனர்.

தற்போது கம்பம் பள்ளத்தாக்கு பகுதியில் நெல் சாகுபடி பணி தீவிரமாக நடைபெற்று வருகிறது. மழை குறைந்ததால் அணையின் நீர்மட்டம் 136 அடியை எட்டுவதில் சிக்கல் ஏற்பட்டுள்ளது.

தமிழக பகுதிக்கு திறக்கப்பட்ட தண்ணீர் மூலம் லோயர்கேம்ப் மின் உற்பத்தி நிலையத்தில் 126 மெகாவாட் மின்சாரம் உற்பத்தி செய்யப்படுகிறது.

கம்பம் அருகே மேற்கு தொடர்ச்சி மலை அடிவாரத்தில் அமைந்துள்ள சுருளி அருவிக்கு தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் இருந்து சுற்றுலா பயணிகள் வருகின்றனர்.

மேலும் அமாவாசை உள்ளிட்ட தினங்களில் முன்னோர்களுக்கு தர்ப்பணம் கொடுத்து கோவிலில் சிறப்பு வழிபாடு நடத்தி வருகின்றனர்.

கடந்த 3 நாட்களாக வெள்ளப்பெருக்கு ஏற்பட்டதால் சுருளி அருவியில் குளிக்க தடை விதிக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து யானைகள் நடமாட்டம் காரணமாக 2 நாட்கள் தடை நீட்டிக்கப்படுவதாக வனத்துறையினர் அறிவித்தனர். இன்று ஆடி பெருக்கை முன்னிட்டு ஏராளமான பக்தர்கள் சுருளி அருவியில் புனித நீராட வந்தனர்.

ஆனால் தடை விதிக்கப்பட்டதால் அவர்கள் ஏமாற்றத்துடன் திரும்பி சென்றனர்.

நாளை ஆடி அமாவாசை என்பதால் ஏராளமான பக்தர்கள் சுருளி அருவி மற்றும் முல்லைப்பெரியாற்றங்கரையில் முன்னோர்களுக்கு தர்ப்பணம் கொடுப்பார்கள். எனவே நாளை சுருளி அருவிக்கு செல்ல அனுமதி வழங்கப்படுமா? என அவர்கள் எதிர்ப்பார்ப்புடன் உள்ளனர்.

# தொகுப்பூதியத்தில் பணியாற்றும் கவுரவ விரிவுரையாளர்களை பணி நிரந்தரம் செய்ய வேண்டும்: ஓபிஎஸ் வலியுறுத்தல்

சென்னை, ஆக. 5

முன்னாள் முதல்அமைச்சர் ஓ.பன்னீர்செல்வம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது:

உயர் கல்வியில் ஒரு மாநிலம் உயரிந்த நிலையை அடைய வேண்டுமென்றால், கல்லூரிகளை துவக்கிவிட்டால் மட்டும் போதாது; அந்தக் கல்லூரிகளில் போதுமான ஆசிரியர்கள் நியமிக்கப்பட வேண்டும். பணியாளர்கள் நியமிக்கப்பட வேண்டும். அவர்களுக்குரிய ஊதிய விகிதங்கள் நிர்ணயிக்கப்பட வேண்டும் மற்றும் போதுமான கட்டமைப்புகள் உருவாக்கப்பட வேண்டும். இந்த நிலை மாணவ, மாணவியர் தரமான கல்வியை பெறும் வாய்ப்பினை உருவாக்குவதோடு, நாட்டிலுள்ள ஏழ்மை மற்றும் கல்வியறிவின்மை நீங்க வழிவகுக்கும். ஆனால். கடந்த மூன்றாண்டு கால தி.மு.க. ஆட்சியில் அரசு கல்லூரிகளில் இதுபோன்றதொரு நிலை ஏற்படுத்தப்படவில்லை.

தமிழ்நாட்டில் மொத்தமுள்ள 164 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் 20 விழுக்காடு ஆசிரியர்கள்தான் நிரந்தரமாகப் பணியாற்றி வருகிறார்கள். மீதமுள்ள 80 விழுக்காடு ஆசிரியர்கள்கவுரவ விரிவுரையாளர்களாக 15 ஆண்டுகளுக்கும் மேலாக தொகுப்பூதியத்தின் அடிப்படையில் பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். இவர்களில் பெரும்பாலானோர் 50 வயதைக் கடந்தவர்கள். கற்பித்தல் பணியைத் தவிர, அரசின் உயர்கல்வித் திட்டங்களுக்கு வேண்டிய தகவல்களை மாணவர்களிடமிருந்து பெற்று அரசு இணையதளத்தில் பதிவேற்றம் செய்யும் பணியையும் இவர்கள் மேற்கொண்டு வருகிறார்கள். சுருக்கமாகச் சொல்ல வேண்டுமென்றால், 80 விழுக்காடு இருக்கக்கூடிய கவுரவ விரிவுரையாளர்கள்தான் அரசுக் கல்லூரிகளின் ஆணிவேராக செயல்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். இவர்கள் இல்லையென்றால், உயர் கல்வியே இல்லை என்ற நிலையில் அரசு கல்லூரிகள் இருக்கின்றன. அரசுக் கல்லூரிகளில் கவுரவ விரிவுரையாளர்களாக பணியாற்றுபவர்கள் எல்லாம் முதுகலைப் பட்டம், ஆய்வியல் நிறைஞர் பட்டம், முனைவர் பட்டம் போன்றவற்றை படித்துள்ளதோடு, தேசிய தகுதித் தேர்வு, மாநில தகுதித் தேர்வு ஆகியவற்றிலும் தேர்ச்சி பெற்றுள்ளனர். ஆனால், இவர்கள் பெறும் தொகுப்பூதியம் மாதத்திற்கு வெறும் 25,000 ரூபாய் மட்டுமே. இந்தத் தொகுப்பூதியமும் 11 மாதங்களுக்கு மட்டுமே வழங்கப்படுகிறது. இந்தியாவிலேயே தமிழ்நாட்டில்தான் மிகக் குறைவான ஊதியம் கவுரவ விரிவுரையாளர்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது. இந்தத் தொகுப்பூதியமும் காலதாமதமாக தரப்படுவதாக கூறப்படுகிறது.

2019ம் ஆண்டு தற்காலிக விரிவுரையாளர்களின் ஊதியம் தொடர்பாக பல்கலைக்கழக மானியக் குழு சில விதிமுறைகளை வகுத்ததாகவும், இதன் அடிப்படையில், தமிழ்நாட்டைத் தவிர பிற மாநிலங்களில் கவுரவ விரிவுரையாளர்களுக்கு 57,000 ரூபாய் அடிப்படை மாத ஊதியமாகவழங்கப்பட்டு வருவதாகவும், கவுரவ விரிவுரையாளர்களை பணி நிரந்தரம் செய்யும் வகையில் 2019ம் ஆண்டு அரசாணை எண் 56 வெளியிடப்பட்டு, அதன் அடிப்படையில் சான்றிதழ்கள் சரிபார்க்கப்பட்ட நிலையில், பொதுத் தேர்தலைத் தொடர்ந்து ஆட்சி மாற்றம் ஏற்பட்ட காரணத்தினால் இந்த நடவடிக்கைகள் கிடப்பில் போடப்பட்டுவிட்டதாகவும் அரசுக் கலைக் கல்லூரி கவுரவ விரிவுரையாளர்கள் ஒருங்கிணைப்புக் குழு தெரிவித்துள்ளது. மேலும், பல்கலைக்கழக மானியக்குழு வகுத்த விதிமுறைகளைக் கேற்ப, கவுரவ விரிவுரையாளர்களுக்கு மாதம் 50,000 ரூபாய் ஊதியம் வழங்கவும், 2019ம் ஆண்டிலிருந்து அதற்கான நிலுவைத் தொகையை வழங்கவும் சென்னை ஐகோர்ட்டு தமிழ்நாடு அரசுக்கு உத்தரவிட்டிருந்ததாகவும், அதனையும் தி.மு.க. அரசு நடைமுறைப்படுத்தவில்லை என்றும் ஒருங்கிணைப்புக் குழு தெரிவிக்கிறது.



இந்தச் சூழ்நிலையில், அரசு கல்லூரிகளில் உள்ள 4,000 உதவிப் பேராசிரியர் பணியிடங்களை நிரப்புவதற்கு போட்டித் தேர்வினை அரசு நடைமுறைப் படுத்தியுள்ளது கவுரவப் பேராசிரியர்களிடையே பேரதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. சொற்ப சம்பளத்தில் குடும்பத்தை நடத்த முடியாமல் வறுமையில் கவுரவவிரிவுரையாளர்கள் வாடிக் கொண்டிருந்தாலும், தங்களுக்கு விடிவுகாலம் வரும், தங்களுடைய பணி நிரந்தரம் செய்யப்படும் என்று எதிர்பார்த்து காத்துக் கொண்டிருந்த நிலையில், தி.மு.க. அரசின் எழுத்துத் தேர்வு என்ற முடிவு வெந்த புண்ணில் வேல் பாய்ச்சுவது போல் அமைந்துள்ளது.

அரசுக் கல்லூரிகளில் பெரும்பாலான ஆசிரியர் பணியிடங்கள் காலியாக உள்ள நிலையில், முதுகலைப் பட்டம், ஆய்வியல் நிறைஞர் பட்டம், முனைவர் பட்டம் போன்றவற்றை படித்து, தேசிய தகுதித் தேர்வு, மாநில தகுதித் தேர்வு ஆகியவற்றில் தேர்ச்சி பெற்று, 15 ஆண்டுகளுக்கும் மேலாக கவுரவ விரிவுரையாளர்களாக பணியாற்றிவரும் 1,146 கவுரவ விரிவுரையாளர்க்களையும் நிரந்தரம் செய்ய வேண்டும் என்ற கோரிக்கையை அரசு கலைக் கல்லூரிகவுரவவிரிவுரையாளர்கள் ஒருங்கிணைப்புக் குழு வைத்துள்ளது. இதனை வலியுறுத்தி 0908 2024 அன்று சென்னை ராஜரத்தினம் ஸ்டேடியம் முன்பு ஒரு நாள் அடையாள உண்ணாநிலைப் போராட்டத்தினை மேற்கொள்ள உள்ளதாகவும் ஒருங்கிணைப்புக் குழு அறிவித்துள்ளது. இவர்களுடைய கோரிக்கையில் நியாயம் உள்ளதாகவே நான் கருதுகிறேன். இவர்களை பணி நிரந்தரம் செய்வதன்மூலம் அவர்கள் மேலும் உத்வேகத்துடன் செயல்படுவார்கள். உயர் கல்வி உத்வேகமடையும்.

அரசுக் கல்லூரிகளில் பணிபுரியும் கவுரவ விரிவுரையாளர்களின் கல்வித் தகுதியையும், அனுபவத்தையும், தற்போது அவர்கள் பெற்றுவரும் மதிப்பூதியத்தையும், அவர்களின் வறுமை நிலையையும் கருத்தில் கொண்டு, தகுதியுள்ள அனைத்து கவுரவ விரிவுரையாளர்களையும் உடனடியாக நிரந்தரம் செய்ய வேண்டும் என்றும், சென்னைஐகோர்ட்டு உத்தரவின்படி அவர்களுக்கு வழங்க வேண்டிய ஊதியத்தை 2019ம் ஆண்டு முதல் வழங்க வேண்டுமென்றும் அண்ணா திராவிட முன்னேற்றக் கழக தொண்டர்கள் உரிமை மீட்புக் குழுவின்சார்பில்வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு அதில் தெரிவித்துள்ளார்.

# வயநாடு நிலச்சரிவிலும் அரசியல் செய்யும் பா.ஜ.க. செல்வப்பெருந்தகை

போடி, ஆக. 5



தேனி மாவட்டம் பழனி செட்டிபட்டியில் காங்கிரஸ் கட்சி சார்பில் நடந்த செயல்வீரர்கள் ஆலோசனை கூட்டத்தில் காங்கிரஸ் கட்சியின் மாநில தலைவர் செல்வப்பெருந்தகை கலந்து கொண்டார். பின்னர் அவர் நிருபர்களுக்கு அளித்த பேட்டியில் கூறியதாவது:

மக்களவை எதிர்கட்சி தலைவர்ராகுல்காந்தி வீட்டில் அமலாக்கத்துறை சோதனை நடத்தும் என்ற தகவல் வெளியாகி உள்ளது. ஜனநாயகத்தை காப்பதற்காக யார் குரல் கொடுத்தாலும் அவர்களை சி.பி.ஐ., அமலாக்கத்துறை, வருமானவரித் துறை ஆகியவை மூலம் நசுக்கும் பணியில் மத்திய பா.ஜ.க. அரசு ஈடுபட்டு வருகிறது.

ராகுல் காந்தி வீட்டில் அமலாக்கத்துறை சோதனை நடத்தினால் அதனை காங்கிரஸ் கட்சியினர் பொறுத்துக்கொள்ள மாட்டார்கள். தெலுங்கு தேசம் கட்சி எம்.பி.க்கள் சிலர் வீட்டில் மத்திய பா.ஜ.க. அரசு அமலாக்கத் துறையை ஏவி முன்பு சோதனை நடத்தினர். தற்போது அந்த கட்சியினர் பா.ஜ.க.வுக்கு ஆதரவான நிலையில் உள்ளதால் அவர்கள்மீதான வழக்குகளை ரத்து செய்துவிட்டனர்.

மக்களவையில் ஜாதி வாரி கணக்கெடுப்பு குறித்து ராகுல்காந்தி பேசியபோது அவருக்கு எதிராக பா.ஜ.க. எம்.பி. அனுராக்தாக்கூர் பேசியது ஆணவத்தின் உச்சம்.

வயநாடு நிலச்சரிவில் பேரிடர் குறித்து ஏற்கனவே எச்சரித்ததாக மத்திய உள்துறை அமைச்சர் அமித்ஷா மாநிலங்களவையில் தெரிவித்தார். ஆனால் அவ்வாறு பேரிடர் நடப்பதாக தெரிந்திருந்தால் ஏன் அங்கு தேசிய பேரிடர் மேலாண்மைக் குழு, ராணுவத்தை அனுப்பி வைக்கவில்லை.

வயநாடு நிலச்சரிவிலும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவ மனமில்லாமல் பா.ஜ.க. அரசியல் செய்து வருகிறது. ஆனால் காங்கிரஸ் தலைவர் ராகுல் காந்தி அங்கு 2 நாட்களாக முகாமிட்டு பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஆறுதல் கூறி வீடுகளை இழந்தவர்களுக்கு கட்சியின் சார்பில் வீடுகள் கட்டித்தரப்படும் என அறிவித்துள்ளார்.

இவ்வாறு அவர் கூறினார்.

# கடலில் வளரும் வைகை ஆற்று ஜிலேபி மீன்கள் மீனவர்கள் ஆச்சரியம்

ராமநாதபுரம், ஆக. 5



ஆறு, ஏரி, குளங்களில் உள்ள மீன்கள் உப்பு தன்மை கொண்ட கடல் நீரில் உயிர் வாழாது என கூறி வருகின்றனர்.

இந்த நிலையில் ராமநாதபுரம் மாவட்டம் தேவி பட்டினம் அருகே வங்காள விரிகுடா கடலில் ஆறு மற்றும் ஏரிகளில் உள்ள ஜிலேபி மீன்கள் பிடிபட்டது. இதனைக் கண்டு மீனவர்கள் ஆச்சரியமடைந்தனர்.

இது குறித்த தகவல் அறிந்த மதுரை காமராஜர் பல்கலைக்கழக கடல் மற்றும் கடலோர ஆய்வுத் துறை பேராசிரியர் முத்துசாமி ஆனந்த் என்பவர் தலைமையில் ஆய்வு செய்தனர்.

அப்போது கடலில் பாக் ஜலசந்தி பகுதியில் ஆறுகளில் வளரும் ஜிலேபி மீன்கள் கூட்டம் கூட்டமாக இருப்பதை கண்டறிந்தனர். இந்த மீன்கள் கடலில் 2 முதல் 5 மீட்டர் ஆழத்தில் சுற்றி திரிகின்றன. 11 சென்டிமீட்டர் முதல் 23 சென்டிமீட்டர் வரை மீன்கள் வளர்ந்துள்ளன.

கடல் தண்ணீரில் இந்த மீன்கள் இனப்பெருக்கம் செய்துள்ளன.

தன்னை சுற்றியுள்ள உப்புநீர் சூழலுக்கு ஏற்ப இந்த ஜிலேபி மீன்கள் மாற்றி பழகி கொண்டிருப்பது தெரிய வந்தது.

இவற்றின் வயிற்றில் உள்ள உணவை பார்த்தால் கடலில் உள்ள மென்மையான உயிரினங்களான கோப் காய்கள், மொல்லஸ்கள், சிறிய பிளாங்டன்கள், பாலி சீட் புழுக்கள் போன்றவற்றை சாப்பிட்டு வளர்ந்தது தெரிய வந்தது.

இந்த ஜிலேபி மீன்கள் கடலில் இனப்பெருக்கத்தை அதிகரித்து வருவதால் அவை உண்ணக்கூடிய கடல் வாழ் உயிரினங்களுக்கு அச்சுறுத்தல் ஏற்படும். வைகை ஆற்றில் இருந்து ஜிலேபி மீன்கள் கடலில் கலந்திருக்கலாம் என ஆராய்ச்சியாளர்கள் கருதுகின்றனர்.

# நீலகிரியில் நிலச்சரிவு வதந்திகள் குறித்து மக்கள் அச்சப்பட வேண்டாம்: கலெக்டர் பேட்டி

ஊட்டி, ஆக. 5



நீலகிரி மாவட்ட கலெக்டர் அலுவலகத்தில் தென்மேற்கு பருவமழையை எதிர்கொள்ளும் வகையில் தேசிய பேரிடர் மீட்புக்குழு மற்றும் தீயணைப்புத்துறை பயன்படுத்த உள்ள பேரிடர் மீட்புக்கருவிகள் மற்றும் உபகரணங்களைமாவட்ட கலெக்டர் லட்சுமி பவ்யா தண்ணீரு நேரில் பார்வையிட்டு அவற்றின் செயல்பாடுகள் குறித்து சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் கேட்டறிந்தார். தொடர்ந்து அவர் நிருபர்களுக்கு பேட்டி அளித்தார். அவர் கூறியதாவது:

நீலகிரி மாவட்டத்தில் ஊட்டி, கூடலூர், தேவாலா மற்றும் குந்தா ஆகிய பகுதிகளில் மாநில பேரிடர் மீட்புக்குழுவினர் முகாமிட்டு தயார்நிலையில் உள்ளனர். மேலும் தேசிய பேரிடர் மீட்புக்குழுவினரும் உஷார்நிலையில் வைக்கப்பட்டு உள்ளனர். இதுதவிர பல்வேறு துறைகளை சேர்ந்த 500 பேர் அடங்கிய 42 குழுவினர் மாவட்டம் முழுவதிலும் தீவிர கண்காணிப்பு பணிகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

வயநாடு மாவட்டத்தில் ஏற்பட்ட நிலச்சரிவு போல நீலகிரி மாவட்டத்திலும் ஏற்பட வாய்ப்பு உள்ளதாக சமூகவலைதளங்களில் உண்மைக்கு புறம்பானசெய்திகளைபரப்பும் நபர்கள் மீது காவல்துறை மூலம் உரிய நடவடிக்கை எடுக்கப்படும். இந்த பொய்யான செய்திகளை பொதுமக்கள் நம்பி அச்சமோ, பீதியோ அடைய வேண்டாம்.

மாவட்ட நிர்வாகம் சார்பில் அனைத்து முன்னெச்சரிக்கை மற்றும் பாதுகாப்பு நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மேலும் நீலகிரி மாவட்டத்தின் அபாயகர பகுதிகளை புவியியல் துறையை சேர்ந்த அதிகாரிகள் விரைவில் ஆய்வு செய்ய உள்ளனர்.

பருவமழை பாதிப்புகளை எதிர்கொள்ள நேரிடும் பொதுமக்கள் அருகிலுள்ள தற்காலிக நிவாரண முகாம்களில் தங்கிக் கொள்ளலாம். மேலும் பருவமழை பாதிப்புகள் குறித்து 1077 தொலைபேசி எண்ணில் தொடர்பு கொண்டு தகவல் தெரிவிக்கலாம்.

இவ்வாறு அவர் கூறினார்.

நடுவட்டம் பேரூராட்சியில் மிகவும் அபாயகரமான இந்திரா நகர் மற்றும் டி.ஆர்.பஜார் ஆகிய பகுதிகளை நேரில் பார்வையிட்ட கலெக்டர், நடுவட்டம் பகுதியில் அமைக்கப்பட்டு உள்ள தற்காலிக குடியிருப்புகளையும் ஆய்வு செய்தார்.

# அ.தி.மு.க.வின் ஆலோசனை கூட்டம் ஒத்திவைப்பு: எடப்பாடி பழனிசாமி

சென்னை, ஆக. 4



அ.தி.மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:

பாராளுமன்ற தேர்தல் முடிவுகள் குறித்து பாராளுமன்ற தொகுதி வாரியாக அ.தி.மு.க. நிர்வாகிகளுடனான கலந்தாலோசனைகூட்டங்கள் 10.7.2024 அன்று தொடங்கப்பட்டு தற்போது வரை 38 பாராளுமன்ற தொகுதிகளுக்கான ஆலோசனைக் கூட்டங்கள் முடிந்துள்ளன.

இந்த நிலையில் 5ந்தேதி (திங்கட்கிழமை) அன்று நடைபெற இருந்த புதுச்சேரி, கரூர் ஆகிய பாராளுமன்ற தொகுதிகளுக்கான கலந்தாலோசனை கூட்டங்கள் ஒத்திவைக்கப்பட்டு கூட்டம் நடைபெறும் தேதி பின்னர் அறிவிக்கப்படும்.

இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

# தஞ்சம் தேடி வந்த ஈழத்தமிழர்களை இலங்கைக்குத் திருப்பி அனுப்பும் கொடும்போக்கினை நிறுத்த வேண்டும்: சீமான்

சென்னை, ஆக. 5

நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது:



இலங்கையை ஆளும் சிங்கள இனவாத அரசின் கோர இன அழிப்புக்கு ஆளாகி, இனப்படுகொலையை எதிர்கொண்டு, அளவில்லா அழிவுகளுக்கும், இழப்புகளுக்கும் முகங்கொடுத்து வீட்டை இழந்து, நாட்டை இழந்து, உறவுகளைப் பறிகொடுத்து, உரிமைகளும், உடைமைகளும் அற்றுப்போய் நிர்கதியற்ற நிலையில் இப்பூமிப்பந்தில் உயிர் வாழ்வதற்கு ஒரு இடம் கிடைக்காதா? என ஏக்கத்தோடும், தவிப்போடும் பத்து கோடி தமிழ் மக்களின் தாயகமாக விளங்கும் தாய்த்தமிழகத்தை நாடிவந்த ஈழச் சொந்தங்களை, இந்திய ஒன்றியத்தை ஆளும் பா.ஜ.க. அரசும், தமிழ்நாட்டை ஆளும் தி.மு.க. அரசும் மனிதநேயம் சிறிதுமின்றி வலுக்கட்டாயமாக இலங்கைக்குத் திருப்பி அனுப்புவது வன்மையான கண்டனத்துக்குரியது.

அடிப்படை உரிமைகள், வாழ்விட வசதிகள் என ஏதும் வழங்காமல் அடிமைகள் போலத் திறந்த வெளி சிறைச்சாலைகளான முகாம்களில் அடைத்து வைத்த போதிலும் உயிர்ப்பாதுகாப்பு என்ற ஒன்றாவது இருந்தது. தற்போது அதனையும் பறிக்கும் விதமாக ஈவு இரக்கமற்று இனவாத நாடான இலங்கைக்கு அனுப்புவது கொலைக்களத்திற்கு அனுப்புவதற்கு ஒப்பாகும்.

தமிழினத்திற்கு யாதொரு தொடர்புமில்லாத பிரிட்டன், பிரான்சு, ஜெர்மனி போன்ற ஐரோப்பிய நாடுகளும், கனடா, ஆஸ்திரேலியா போன்ற மேலை நாடுகளும் தம்மை நாடிவந்த தமிழ்மக்களுக்கு அடைக்கலமளித்து, அரவணைத்து, ஆதரித்து அனைத்துவித அடிப்படை உரிமைகளையும் உறுதிசெய்து வாழ்வளிக்கின்றன. ஆனால், தனித்த பெரும் தேசிய இனமாகப் பத்துகோடி தமிழர்கள் பரந்து விரிந்து, நிலைத்து நீடித்து வாழும் இந்தியப்பெருநாட்டில், தொப்புள்கொடி உறவுகளான ஈழச்சொந்தங்களைச் சட்டவிரோதமாகக் குடியேறியவர்கள் என விரட்டுவது தமிழ்த் தேசிய இனத்தையே அவமதிப்பதாகும்.

இலங்கையிலிருந்து வந்த ஈழச்சொந்தங்கள் சட்டவிரோதமாகக் குடியேறியவர்களா? பாகிஸ்தான், பங்களாதேசிலிருந்து அகதிகளாக வந்த இந்துக்களைச் சட்டவிரோதமாகக் குடியேறிவர்களென இந்நாடு கருதுமா? சீனாவிலிருந்து அகதிகளாக வரும் திபெத்திய மக்களை அவ்வாறு கூறி துரத்துமா? திபெத்தியர்களுக்கு இந்நாடு அளிக்கும் வசதிகள், சலுகைகள்என்னென்ன? அவர்களிடம் காட்டும் அக்கறை, பரிவு, பற்றில் நூற்றில் ஒரு பங்குகூட, நாட்டுக்குப் பெருத்த பொருளாதாரப் பங்களிப்புகளைச்செய்யும்தமிழ்ப் பேரினத்தின் தொப்புள் கொடி உறவுகளான ஈழத்தமிழர்களிடம் காட்ட மறுப்பதேன்? அவர்கள் தமிழர்கள் என்பதற்காக இந்த நாடு எந்தக் கூடுதல் சலுகையும் அளிக்காவிட்டாலும், குறைந்தபட்சம் மனிதர்கள் என்ற அடிப்படையிலாவது அவர்களுக்கான தேவைகளை நிறைவேற்றிக் கொடுத்திருக்கலாமே! அதனைவிடுத்து, எவ்வித அடிப்படை வசதியுமின்றித் திறந்தவெளி சிறைக்கூடத்தில் கைதிகளைப் போல அவர்களை அடைத்துவைத்து, வந்த நாள் முதல் கண்காணித்துக் கடும் அடக்குமுறைகளுக்கும், சித்ரவதைகளுக்கும் ஆளாக்கி தற்போது சட்டவிரோதமாகக் குடியேறியவர்கள் எனக் கூறி திருப்பி அனுப்புவது தமிழினத்தின் தன்மான, இனமான உணர்வுகளைச் சீண்டிப்பார்ப்பதாகும்.

இந்தியாவைத் தந்தையர் நாடெனக் கருதி நேசித்து நின்ற எமது தொப்புள்கொடி உறவுகள் எப்படிச் சட்டவிரோதமாகக் குடியேறியவர்கள் ஆனார்கள்? அவர்களைக் குடியமர்த்தும்போது அவர்கள் சட்டவிரோதமாகக் குடியேறியவர்கள் என்று தெரியாதா? சட்டவிரோதமாக வந்தவர்கள் என்றால் எந்த அடிப்படையில் இந்நாடு குடியமர்த்தியது? அதிகாரிகள் முன்னிலையில் பதிவு செய்து, முகாம்களில் தங்கவைத்து, அவர்களின் எண்ணிக்கை, அவர்கள் வெளியே செல்லும் நேரம், உள்ளே வரும் நேரம் என அனைத்தையும் ஒவ்வொரு நாளும் கணக்கெடுத்து அவற்றைச் சட்டப்பூர்வமாக ஆவணப்படுத்திவிட்டு, தற்போது அவர்களைச் சட்டவிரோதமாகக் குடியேறி யவர்கள் என்று வெளியேற்றுவது கொடுங்கோன்மையாகும்.

உலகின் மற்ற நாடுகள் எல்லாம் தங்களை நாடி வந்த மக்களை, தங்கள் நாட்டுக் குடிகள் போலப் பாவித்துக் குடியுரிமை வழங்கிப் பாதுகாக்கும் சூழலில், ஒரு தலைமுறை கடந்து இத்தனை ஆண்டுகளாக இந்தநிலத்தில் வாழ்ந்தும் எம்மக்களுக்குக் குடியுரிமையை மறுத்துப் புறந்தள்ளுவது எந்தவகையில் நியாயம்? ஈழத்தாயகத்தை முற்றாகச் சிதைத்தழித்து, அங்கு வாழ்ந்த தமிழின மக்களை நாடற்றவர்களாக்கி, ஏதிலியெனும் இழிநிலைக்குத் தள்ளி, நாடு நாடாக ஓடவைத்து விட்டு இன்றைக்கு அவர்கள் தஞ்சம்கேட்டு நிற்கையில், அவர்களைச் சட்டவிரோதமாகக் குடியேறியவர்கள் எனக்கூறி துரத்துவது எவ்வகையில் நியாயமாகும்?

இந்நாட்டின் விடுதலைக்காக அளப்பெரும் பங்களிப்பைச்செய்த இந்நிலத்தின் பூர்வக்குடி மக்களான தமிழர்களை மட்டும் மாற்றாந்தாய் மனப்போக்கோடு வெளியேற்றுவது பெரும்கோபத்தைத் தருகிறது. இந்திய ஒன்றிய மற்றும் தமிழ்நாடு அரசுகளின் இக்கொடுஞ்செயல் நாட்டின் முன்னேற்றத்திற்கும், பொருளாதாரத்திற்கும் பெரும் பங்களிப்புச் செய்து வரும் தமிழர்களின் உணர்வுகளை உரசிப்பார்ப்பதோடு, வருங்காலத் தலைமுறை பிள்ளைகளிடத்தில் இந்திய உணர்வே முழுமையாகப் பட்டுப்போகுமளவுக்கு ஆறாத ரணத்தை உருவாக்குமென எச்சரிக்கிறேன்.

ஆகவே, ஈழச்சொந்தங்களைச் சட்டவிரோதமாகக் குடியேறியவர்கள் எனக்கூறி வெளியேற்றும் நடவடிக்கைகளை இந்திய ஒன்றிய அரசும், தமிழ்நாடு அரசும் உடனடியாக நிறுத்த வேண்டுமென நாம் தமிழர் கட்சி சார்பாக வலியுறுத்துகிறேன். மேலும், தமிழ்நாட்டை ஆளும் தி.மு.க. அரசு தனது தேர்தல் அறிக்கையில் கூறியுள்ளவாறு ஈழத்தமிழர்களுக்குக் குடியுரிமை வழங்க உடனடியாக நடவடிக்கை எடுக்கச் சட்டப்போராட்டமும், அரசியல் நெருக்கடியும் கொடுக்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அதில் தெரிவித்துள்ளார்.

# ஆடிப்பெருக்கு விழா கொண்டாட்டம் மேட்டூர் காவிரி ஆற்றில் புனித நீராடிய பொதுமக்கள்

சேலம், ஆக. 5

ஆடிப்பெருக்கு நாளில் நெல் விதைத்தால் தைப் பொங்கலுக்கு அறுவடை செய்யலாம் என்பது ஐதீகம். அதன் அடிப்படையில் விவசாயத்திற்கு ஆதாரமான ஆறு, குளம் உள்பட நீர் நிலைகளைபோற்றும் விதமாக ஆடிப்பெருக்கு விழா கொண்டாடப்படுகிறது.



இதையொட்டி ஆடி மாதம் 18ம் நாளான ஆடிப்பெருக்கில் காவிரி கரையோரங்களில் மக்கள் திரண்டு வழிபாடு நடத்துகிறார்கள். இதில் ஆண்களும், பெண்களும் அதிகாலையிலே பூ, மஞ்சள், குங்குமம், வளையல், காதோலை கருகமணி, அரிசி, வெல்லம் என்று மங்கள பொருட்களோடு மேட்டூர் காவிரி கரையில் திரண்டனர். மேட்டூர் காவிரியில் 1 லட்சத்து 10 ஆயிரம் கன அடி தண்ணீர் திறந்து விடப்பட்டுள்ளதால் வெள்ளம் கரை புரண்டு ஓடுகிறது.

இதனால் மேட்டூர் பகுதியில் கொளத்தூர் செட்டிப்பட்டி, கோடையூர், பண்ணவாடி, மூலக்காடு சென்றாய பெருமாள் கோவில், காவிரி பாலம் முதல் முனியப்பன் கோவில் வரை, எம்.ஜி.ஆர்.பாலம், திப்பம்பட்டி, கீரைக்காரனூர், கூணான்டியூர் ஆகிய 9 இடங்களில் மட்டும் பாதுகாப்பு நிபந்தனைகளுடன் குளிக்க அனுமதிக்கப்பட்டனர்.

இந்த பகுதிகளில் அதிகாலையிலேயே திரண்ட பொதுமக்கள் பூஜைகள் செய்து சிறப்பு வழிபாடுகள் நடத்தி புனித நீராடினர். புதுமண தம்பதியினர் காவிரியில் புனித நீராடி புதிய தாலியை அணிந்து கொண்டனர். மேலும் புதுமண தம்பதிகள் அருகம் புல் வைத்து ஆற்றில் புனித நீராடி வருகிறார்கள்.

தொடர்ந்து காவிரி ஆற்றில் புனித நீராடி காவிரி ஆற்றின் கரையோரம் உள்ள அணைக்கட்டு முனியப்பனை தரிசனம் செய்து வருகிறார்கள். மேலும் குடும்பத்துடன் அங்கு அசைவ உணவுகளை சமைத்து சாப்பிட்டு மகிழ்ந்தனர். மேலும் பக்தர்கள் கோவிலில் உள்ள சாமி சிலைகள் மற்றும் பூஜை பொருட்களை தாரை தப்பட்டை முழங்க ஊர்வலமாக குடும்பத்தினருடன் வந்து காவிரி ஆற்றில் சுத்தம் செய்து சிறப்பு பூஜைகள் செய்தனர். இதனால் காவிரி கரையோர பகுதிகளில் அனுமதிக்கப்பட்ட பகுதிகளில் ஆடிப்பெருக்கு விழா கோலாகலமாக கொண்டாடப்பட்டு வருகிறது.

மேலும் இளைஞர்கள், பொதுமக்கள், சுற்றுலா பயணிகள் காவிரி கரையோரங்களில் பாதுகாப்பற்ற முறையில் நின்று வேடிக்கை பார்க்கவும், பிற இடங்களில் ஆற்றில் இறங்கி குளிப்பது, கரையில் நின்று புகைப்படம் எடுத்தல், செல்பி எடுத்தல், ஆற்றில் இறங்கி நீச்சல் அடித்தல் ஆகியவற்றிற்கு தடை விதிக்கப்பட்டிருந்தது.

மேட்டூரில் இருந்து பூலாம்பட்டி வரை காவிரி கரையோர பகுதிகளில் மாவட்ட போலீஸ் சூப்பிரண்டு அருண் கபிலன் உத்தரவின் பேரில் கூடுதல் போலீஸ் சூப்பிரண்டு சங்கர் மேற்பார்வையில் 550 போலீசார் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டுள்ளனர். பேரி கார்டு வைத்தும், சி.சி.டி.வி. கேமராக்கள் வைத்தும் போலீசார் தீவிரமாக கண்காணித்து வருகிறார்கள். பேரிடர் மீட்புக்குழுவும் தீவிர கண்காணிப்பில் ஈடுபட்டுள்ளது.

# ஆடிப்பெருக்குஆடி அமாவாசை: திருமூர்த்திமலை கோவிலில் மாட்டு வண்டிகளில் குவியும் பக்தர்கள்

உடுமலை, ஆக. 5

திருப்பூர் மாவட்டம் உடுமலையை அருகில் உள்ள மேற்கு தொடர்ச்சி மலை அடிவாரப்பகுதியில் திருமூர்த்தி மலை உள்ளது. இங்குள்ள அமணலிங்கேஸ்வரர் கோவில் பிரம்மா, சிவன், விஷ்ணு ஆகிய கடவுள்கள் ஒரே குன்றில் ஒன்றாக அமர்ந்து பக்தர்களுக்கு அருள்பாலித்து வருகிறார்கள்.



அமணலிங்கேஸ்வரர் கோவிலின் அடிவாரத்தில் இருந்து சுமார் 900 மீட்டர் உயரத்தில் அடர்ந்த வனப் பகுதியில் பஞ்சலிங்க அருவி அமைந்துள்ளது. அருவியில் குளித்து மகிழவும் மும்மூர்த்திகளை சாமி தரிசனம் செய்யவும் நாள்தோறும் ஏராளமான சுற்றுலா பயணிகள் மற்றும் பக்தர்கள் திருமூர்த்தி மலைக்கு வருகை தருகின்றனர்.

அமணலிங்கேஸ்வரர் கோவிலில் அமாவாசை, கிருத்திகை, பிரதோஷம், மகாசிவராத்திரி உள்ளிட்ட விசேஷ நாட்களில் மும்மூர்த்திகளுக்குசிறப்பு பூஜைகள் நடைபெற்று வருகிறது. ஆனால் தை மற்றும் ஆடி மாதங்களில் வருகின்ற அமாவாசை நாட்கள் மிகவும் விசேஷமானது என்பதால் அன்றைய தினங்களில் பக்தர்கள் அதிகளவில் வருகை தருவார்கள்.

அத்துடன் அமாவாசை விழாவில் கலந்து கொள்வதற்காக சுற்றுப்புற கிராமங்களை சேர்ந்த மற்றும் வெளிமாவட்ட பக்தர்கள் குதிரை மற்றும் மாட்டு வண்டிகளில் வருவதை பாரம்பரிய வழக்கமாக கொண்டு உள்ளார்கள்.

அதுமட்டுமின்றி அமாவாசைக்கு முன்தினம் திருமூர்த்தி மலைக்கு மாட்டு வண்டிகளில் வருகின்ற பக்தர்கள்இரவுமுழுவதும் கோவில் மற்றும் அணைப் பகுதியில் தங்கி கொள்கின்றனர். பின்னர் காலையில் எழுந்து அருவிக்கு சென்று குளித்துவிட்டு மும்மூர்த்திகளை சாமி தரிசனம் செய்கின்றனர். அதன் பின்னர் மறைந்த தங்களதுமுன்னோர்களுக்கு பாலாற்றின் கரையில் அமர்ந்து தர்ப்பணம் கொடுத்து விட்டு திரும்பிச் செல்வார்கள்.


அந்த வகையில் இன்று திருமூர்த்தி மலையில் நடைபெற்ற ஆடிப்பெருக்கு வழிபாடு மற்றும் நாளை நடைபெற உள்ள ஆடி அமாவாசை விழாவில் கலந்து கொள்வதற்காக நேற்று முதல் பக்தர்கள் மாட்டு வண்டிகளில் வந்து குவிந்தனர். களைப்படைந்த மாடுகளுக்கு பெருமாள் கோவில் அருகில் வண்டிகளுடன் ஓய்வு அளிக்கப்பட்டது. இதனால் திருமூர்த்தி மலை பகுதியில் மாட்டு வண்டிகள்அதிக அளவில் காணப்படுகிறது.

ஆடிப்பெருக்கு, ஆடி அமாவாசை மற்றும் வார விடுமுறை நாட்களை முன்னிட்டு இன்று மற்றும் நாளை (திங்கட்கிழமை) பக்தர்கள் அதிக அளவில் திருமூர்த்திமலைக்கு வருகை தருவதற்கான வாய்ப்புகள் உள்ளது. இதனால் திருமூர்த்தி மலை பகுதியில் 3 நாட்களுக்கு போலீஸ் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது. இதற்கான பணியில் உடுமலை சப்டிவிஷனுக்கு உட்பட்ட போலீசாரும், ஊர்க்காவல் படையினரும் ஈடுபட்டு வருகின்றனர்.

# கோவில் திருவிழாவில் பயங்கர தீ விபத்து நேர்த்தி கடனுக்காக கொண்டுவரப்பட்ட ஆடுகள் உயிரிழப்பு

தென்காசி, ஆக. 5

தென்காசி மாவட்டம் சங்கரன்கோவில் அடுத்த வெள்ளாலங்குளத்தில் உள்ள பூலுடையார் சாஸ்தா அய்யனார் கோவிலில் நேற்று திருவிழா நடைபெற்றது. இந்த திருவிழாவில் திடீரென பயங்கர தீ விபத்து ஏற்பட்டது.



இந்த தீ விபத்தின்போது 4 சமையல் சிலிண்டர்கள் வெடித்து சிதறின. இதனால் 50க்கும் மேற்பட்ட குடிசைகள் எரிந்து நாசமாகின.

20க்கும் மேற்பட்ட இருசக்கர வாகனங்கள் சேதமடைந்தன. மேலும் நேர்த்திக்கடனுக்காக கொண்டுவரப்பட்ட பத்துக்கும் மேற்பட்ட ஆடுகள் உயிரிழந்தன.

கோவில் திருவிழாவில் திடீரென பயங்கர தீ விபத்து ஏற்பட்டதால் பக்தர்கள் சோகத்தில் மூழ்கினர். இந்த சம்பவம் அந்த பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது.

# மதுபானக் கூடங்களை மூடுங்கள்... விதிகளுக்கு புறம்பாக செயல்பட்ட 5 ஸ்டார் ஓட்டல்களுக்கு அதிரடி உத்தரவு

சென்னை, ஆக. 5

சென்னையில் விதிமுறைகளுக்கு புறம்பாக செயல்பட்டு வந்த 5 தனியார் ஸ்டார் ஓட்டல்களின் மதுபானக் கூடங்கள் உரிமங்களை ரத்து செய்து, உடனடியாக மூட மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத்துறை ஆணையர் கார்த்திகா உத்தரவிட்டுள்ளார்.



இதுதொடர்பாக தமிழ்நாடு அரசு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:

சென்னை மாநகரில் உள்ள ரட்டா சோமர்செட், தாஜ் கிளப் ஹவுஸ், வி.வி.ஏ. ஓட்டல்ஸ் (ரேடிசன் ப்ளு), ஹையத் ரீஜன்சி, தி பார்க் ஆகிய 5 தனியார் ஸ்டார் ஓட்டல்களில் எப்.எல்.3 மதுபானக் கூடங்கள் அரசு உரிமம் பெற்று இயங்கி வந்தன. அவற்றுள் சட்டவிதிகளுக்கு மாறாக வெளிநபர்களை மது அருந்த அனுமதித்தல், மதுபானங்களை வினியோகம் செய்தல் முதலிய குற்றங்களில் ஈடுபட்ட விவரங்கள் தெரியவந்தன.

ஆதலால், சென்னை மாநகரில் விதிமுறைகளுக்கு புறம்பாக செயல்பட்டு வந்த 5 ஸ்டார் ஓட்டல்களிலும் செயல்பட்டு வந்த மதுபானக் கூடங்களை நடத்துவதற்கு வழங்கப்பட்டிருந்த எப்.எல்.3 உரிமங்களைத் தற்காலிகமாக ரத்து செய்தும் அந்த மதுபானக் கூடங்களை உடனடியாக மூடவும், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத்துறை ஆணையர் உத்தரவிட்டுள்ளார்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# ஆடி அமாவாசையை முன்னிட்டு ராமேசுவரம் கோவிலில் நடை திறப்பு




ராமேசுவரம், ஆக. 5

ராமநாதபுரம் மாவட்டம் ராமேசுவரம் ராமநாத சாமி கோவிலில் ஆடி திருக்கல்யாண திருவிழா கடந்த 29ந் தேதி கொடியேற்றத்துடன் தொடங்கியது. விழாவின் 7ம் நாளான இன்று (திங்கட்கிழமை) ஆடி அமாவாசையை முன்னிட்டு காலை 11 மணிக்கு தங்க கருட வாகனத்தில் ராமபிரான் அக்னி தீர்த்த கடற்கரைக்கு தீர்த்தவாரி பூஜைக்கு எழுந்தருள்கிறார்.

இரவு 8 மணிக்கு வெள்ளி தேரோட்டம் நடைபெறுகிறது. இன்று அதிகாலை 3 மணிக்கு திறக்கப்படுகிறது. பகல் 1 மணிக்கு சாத்தப்படாமல் பகல் முழுவதும் தரிசனத்திற்காக திறக்கப்பட்டு இருக்கும். இரவு 9 மணிக்கு பிறகுதான் நடை சாத்தப்படும் என கோவில் நிர்வாகத்தால் அறிவிக்கப்பட்டு உள்ளது.

ஆடி திருக்கல்யாண திருவிழாவில் 8ம் திருநாளான நாளை (திங்கட்கிழமை) மாலை 4 மணிக்கு மேல் கோவிலில் இருந்து அம்பாள், தங்க குதிரை வாகனத்தில் திட்டக்குடி மேலத்தெரு மண்டகப்படிக்கு எழுந்தருளும் நிகழ்ச்சி நடைபெறுகிறது. இதனால் நாளை மாலை 4 மணியில் இருந்து இரவு வரையிலும் நடை திறப்பில் மாற்றம் செய்யப்பட்டு, பக்தர்கள் கோவிலில் சாமி தரிசனம் செய்யவும், தீர்த்தமாடவும் அனுமதி இல்லை என கோவில் நிர்வாகத்தால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதையடுத்து, ஆகஸ்ட் 12ம் தேதி அன்று மஞ்சல் நீராடல் நிகழ்ச்சி நடைபெறுவதால் மாலை 5 மணியில் இருந்து மாலை 7 மணிவரை கோவில் நடை சாத்தப்படும். ஆகஸ்ட் 14ம் தேதி அன்று கெந்தமாதன பர்வதம் மண்டகப்படிக்கு செல்வதால் அதிகாலை 2:00 மணிக்கு நடை திறந்து 2:30 மணிமுதல் 3:00 மணிவரை ஸ்படிக லிங்க பூஜை நடைபெற்று 6:00 மணிக்கு கெந்தமாதன பர்வதம் செல்லும்போது நடை சாத்தப்பட்டு இரவு 10:00 மணிவரை நடை சாத்தப்படும் என கோவில் நிர்வாகம் தெரிவித்துள்ளது.

# ஆடிப்பெருக்கு விழாவில் ராட்சத ராட்டினம் சாய்ந்ததால் பரபரப்பு

திருப்பத்தூர், ஆக .5

தமிழகத்தில் உள்ள அனைத்து நதிகளின் கரையோரங்களிலும் ஆடிப்பெருக்கு விழா, ஆடி மாதத்தின் 18ம் நாள் கொண்டாடப்படுவது வழக்கம். அந்த வகையில், திருப்பத்தூர் மாவட்டம் பசலிகுட்டை என்ற கிராமத்தில் உள்ள பிரசித்தி பெற்ற முருகன் கோவிலில் இன்று ஆடிப்பெருக்கு விழா சிறப்பாக நடைபெற்றது. இதையொட்டி கோவிலுக்கு காலை முதல் பக்தர்கள் வருகை தந்து நேர்த்திக்கடன் செலுத்தினர்.



அங்கு பொதுமக்களின் பொழுதுபோக்குக்காக சிறிய வகை ராட்டினம் முதல் ராட்சத ராட்டினங்கள் வரை அமைக்கப்பட்டிருந்தது. மாலை முதல் அந்த ராட்டினங்கள் இயங்கி வந்தன. இந்த நிலையில் அங்கிருந்த ஒரு ராட்டினம் இயங்கிக் கொண்டிருந்தபோது, திடீரென பழுதாகி ஒரு பக்கமாக சாய்ந்தது. இதனால் ராட்டினத்தில் இருந்த பொதுமக்கள் பயத்தில் அலறினர். இதையடுத்து ராட்டினம் உடனடியாக நிறுத்தப்பட்டது. அதில் சிக்கியிருந்தவர்களை ராட்டின ஆபரேட்டர்கள், போலீசார் மற்றும் அங்கிருந்த பொதுமக்கள் மீட்டனர். ராட்சத ராட்டினங்கள் அனுமதியின்றி அமைக்கப்பட்டதும், ராட்டினத்தில் 2 பேர் அமரும் இடத்தில் 4 பேர் அமர வைக்கப்பட்டதுமே விபத்துக்கு காரணம் என்று பொதுமக்கள் தெரிவித்தனர். ஆடிப்பெருக்கு விழாவில் ராட்டினம் சாய்ந்ததால் அங்கு பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

Title-Code:-TNTAM24615
R.Dis No:- 968/2023
5.8.2024




# விடுமுறை கொண்டாட்டத்தில் கீர்த்தி சுரேஷ்

தென்னிந்தியதிரை உலகில் முன்னணி கதாநாயகியாக திகழ்பவர் கீர்த்தி சுரேஷ். தமிழ், தெலுங்கு மொழியை தொடர்ந்து இந்தி மொழி படங்களிலும் நடிக்க தொடங்கியுள்ளார். சினிமா நடிப்பில் எவ்வளவு பிசியாக இருந்தாலும் குடும்பத்தினருடனும், நண்பர்களுடனும் பேசி மகிழ்வதுடன் அவரது தனிப்பட்ட நடவடிக்கைகளை ஆர்வமுடன் தனது சமூக வலைதளத்தில் பகிர்ந்து வருகிறார்.

அந்த வகையில் பிசியான படப்பிடிப்புக்கு மத்தியில் கிடைத்த விடுமுறையை மகிழ்ச்சியாக கொண்டாடியுள்ளார். செல்லப்பிராணியுடன் கொஞ்சி மகிழ்வது மற்றும் தங்கி இருக்கும் ஓட்டலில் சமையல் கலைஞரோடு இணைந்து சமைப்பது என விதவிதமான புகைப்படங்களை தனது இன்ஸ்டாகி–ராமில் கடந்த சில வாரங்கள் எப்படி பறந்தது என தலைப்பிட்டு பகிர்ந்துள்ளார் கீர்த்தி சுரேஷ்.

அவரது நடிப்பில் ரகுதாத்தா படம் வருகிற 15ந் தேதி தமிழ் மற்றும் தெலுங்கு மொழியில் வெளியாகி இருக்கிறது.

# என் படத்தில் எனக்கே தெரியாமல் காட்சிகள் இயக்குனர் விஜய் மில்டன் கொந்தளிப்பு



விஜய் மில்டன் இயக்கத்தில் நேற்று திரைக்கு வந்துள்ள படம் 'மழை பிடிக்காத மனிதன்'. படத்தின் கதாநாயகனாக விஜய் ஆண்டனி நடிக்க சரத்குமார், சத்யராஜ், மேகா ஆகாஷ் உள்பட பலர் நடித்துள்ளனர்.

படம் வெளியான முதல் நாளான நேற்று படத்தின் இயக்குனர் விஜய் மில்டன் வீடியோ ஒன்றை திடீரென வெளியிட்டார். அதில் அவர் கூறியிருப்பதாவது:

இந்த படத்தில் கதாநாயகன் யார்? அவர் ரவுடியா? போலீசா? அவருடன் வரும் சரத்குமார் யார்? அவருக்கு ஏன் மழை பிடிக்காது போன்ற பல கேள்விகளி–லேயே கதையை வைத்து படம் எடுத்தி–ருந்தோம். ஆனால் படம் பார்க்கும் போது எனக்கே 'ஷாக்' ஆகி விட்டது. படத்தில் எனக்கே தெரியாமல் ஒரு நிமிட காட்சி வந்துள்ளது. அந்த காட்சி நான் வைக்கவில்லை. அந்த காட்சியில் இவன் யார்? இவனது பின்னணி என்ன என்பதை சொல்லி விட்டார்கள். இப்படி சொல்லிவிட்டால் படத்தை எப்படி பார்க்க முடியும். அதற்காகவா இவ்வளவு கஷ்டப்–பட்டோம். இப்படி ஒரு காட்சி வருகிறது என்றால் அதற்கேற்றார்போல் நான் மாற்றி எடுத்திருப்பேன். எடுத்து முடித்த படத்தை சென்சார் செய்த படத்தில் முன்பகுதியில் ஒரு நிமிட காட்சியை சேர்க்க யார் கொடுத்தார்கள் என்று தெரியவில்லை.

ஒரு இயக்குன–ரிடம் கேட்காமல் 1 நிமிட காட்சியை சேர்த்து படத்தை காலி பண்றது என்பது... தயவு செய்து 1 நிமிடத்தை மறந்து விட்டு படத்தை ஓட்டிப்பாருங்கள். அவன் யார்? என மர்மத்தை வைத்து எடுத்ததை நீங்கள் ஆரம்பத்திலேயே சொல்லி விட்டால் பார்ப்பவர்கள் கையை கட்டிக்–கொண்டு அதான் எங்களுக்கே தெரியுமே என்றுதானே படம் பார்ப்பார்கள்.

எனவே 1 நிமிட காட்சியை தயவு செய்து மறந்து விடுங்கள்.

இவ்வாறு அவர் கூறி உள்ளார்.

விஜய் மில்டனின் வீடியோ வெளியாகி பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

# விஜய் தேவரகொண்டா தோற்றத்தை வரவேற்ற ராஷ்மிகா மந்தனா







கீதா கோவிந்தம் என்ற படத்தில் விஜய் தேவரகொண்டாவும், ராஷ்மிகா மந்தனாவும் ஜோடியாக நடித்திருந்தனர். படம் திரைக்கு வந்து நல்ல வரவேற்பை பெற்றது. இதை தொடர்ந்து விஜய் தேவரகொண்டா–வுக்கும் ராஷ்மிகாவுக்கும் நெருக்கம் அதிகரித்துள்ளதாக தகவல்கள் வெளியானது.

பல்வேறு இடங்களுக்கு இருவரும் டேட்டிங் செல்வதாகவும் கூறப்பட்டது.

இந்த தகவலை இருவரும் இதுவரை ஏற்கவோ மறுக்கவோ இல்லை. இந்நிலையில் விஜய் தேவரகொண்டாவின் 12வது படம் விடி12 என்ற பெயரில் உருவாகி வருகிறது.

படத்தின் படப்பிடிப்பு தீவிரமாக நடந்து வரும் நிலையில் அடுத்த ஆண்டு மார்ச் 28ந் தேதி படத்தை திரைக்கு கொண்டு வர படக்குழுவினர் திட்டமிட்டுள்ளனர்.

படத்திற்கு அனிருத் இசையமைத்துள்ளார். இதையடுத்து படத்தின் முதல் தோற்றம் நேற்று வெளியானது. போஸ்டரில் இடம் பெற்ற விஜய் தேவரகொண்டாவின் ஆக்ரோஷ தோற்றம் சமூக வலைதளங்களில் வேகமாக பரவி வருகிறது.

விஜய் தேவரகொண்டா தோற்றத்திற்கு ரசிகர்கள் வரவேற்று பல்வேறு கருத்துக்களை பதிவிட்டு வரும் நிலையில் ராஷ்மிகாவும், விஜய் தேவரகொண்டாதோற்றத்தைவரவேற்று உற்சாகமாக கருத்தை பதிவிட்டுள்ளார்.

# குழந்தையுடன் கடற்கரையில் துள்ளி விளையாடிய ஸ்ரேயா சரண்



ரஜினியுடன் சிவாஜி, விஜய்யுடன் அழகிய தமிழ் மகன், தனுசுடன் திருவிளையாடல் ஆரம்பம் உள்பட பல படங்களில் நடித்து தமிழ் சினிமாவில் பிரபலமானவர் ஸ்ரேயாசரண். தொடர்ந்து தமிழ், தெலுங்கு, இந்தி, கன்னடம், ஆங்கில மொழி படங்களில் நடித்துள்ளார். கடந்த 2018ம் ஆண்டு தொழில் அதிபரும், டென்னிஸ் வீரருமான ஆன்ட்ரி கொங்சீவை திருமணம் செய்து கொண்டார். அவருக்குராதா என்றபெண்குழந்தைஇருக்கிறது. திருமணத்திற்கு பிறகு சினிமா வாய்ப்புகள் குறைந்த நிலையில் குழந்தையுடன் அதிக நேரத்தை செலவிட்டு மகிழ்ந்து வருகிறார். அந்த வகையில் பிகினி உடையில் குழந்தையுடன் கடற்கரையில் மகிழ்ச்சியாக துள்ளி விளையாடும் புகைப்படங்களை தனது சமூக வலைதள–பக்கத்தில் பகிர்ந்துள்ளார் ஸ்ரேயாசரண்.

# எந்த காலத்திலும் அரசியலுக்கு வர மாட்டே ஆண்ட்ரியா

திரை உலகில் பாடகியாகவும், நடிகையாவும் வலம் வந்து கொண்டிருப்பவர் ஆண்ட்ரியா. பல்வேறு ஊர்களுக்கு சென்று இசைக்கச்சேரி நடத்தி ரசிகர்களை மகிழ்வித்து வருகிறார். இவருக்கென தனி ரசிகர்கள் கூட்டம் உள்ளது. இந்நிலையில் புதுச்சேரியில் அவர் அளித்த பேட்டியில் கூறியிருப்பதாவது:

இதுவரை ஹாரர், திரில்லர், காதல் கதை என மனதிற்கு பிடித்தமான கதாபாத்திரங்களில் நடித்து விட்டேன். நான் எந்தகாலத்திலும் அரசியலுக்கு வர மாட்டேன். விஜய் அரசியல் பிரவேசத்திற்கு வாழ்த்துக்கள். வடசென்னை 2ம் பாகம் வருவது பற்றி வெற்றிமாறனிடம்தான் கேட்க வேண்டும்.

அந்த படம் உருவானால் அதில் நடிப்பதற்கு ஆர்வமாக இருக்கிறேன். நான் நடித்த சந்திரா கதாபாத்திரத்தில் நான் நடிப்பதில் எந்த சந்தேகமும் இல்லை.

இவ்வாறு அவர் கூறினார்.

வெற்றிமாறன் இயக்கத்தில் தனுஷ் நடிப்பில் கடந்த 2018ம் ஆண்டு வெளியான படம் வடசென்னை. கேங்ஸ்டர் கதை களத்தில் உருவான இந்த படம் திரைக்கு வந்து ரூ.50 கோடிக்கு மேல் வசூலை பெற்று தந்தது. முதல் பாகம் முடியும் போது அன்புவின் எழுச்சி தொடரும் என குறிப்பிடப்பட்டு இருந்தது. இதையடுத்து படத்தின் 2ம் பாகம் எப்போது உருவாகும் என்று ரசிகர்கள் மத்தியில் பெரிய எதிர்பார்ப்பு இருந்து வருகிறது.

# சர்ச்சையான குத்துசண்டை போட்டி... அல்ஜீரிய வீராங்கனைக்கு சர்வதேச ஒலிம்பிக் கமிட்டி ஆதரவு



பாரீஸ் ஒலிம்பிக்கில் பெண்களுக்கான குத்துச்சண்டை போட்டியில் 66 கிலோ எடைப்பிரிவில் காலிறுதிக்கு முந்தைய சுற்றில் இத்தாலியின் ஏஞ்சலா கரினி அல்ஜீரியாவின் இமானே கெலிஃப் ஆகியோர் மோதினார்கள்.

போட்டி தொடங்கியதும் இத்தாலி வீராங்கனை கரினி எதிர்பார்க்காத வகையில் அவரது முகத்தை நோக்கி கெலிஃப் வேகமாக ஒரு பஞ்ச் விட்டார். இதில் இத்தாலி வீராங்கனை நிலைகுலைந்தார். அத்துடன் இனிமேல் எதிர்த்து விளையாட முடியாது என அறிவித்தார். இதனால் 46 வினாடிகளிலேயே போட்டி முடிந்தது.

இதனால் கெலிஃப் வெற்றி பெற்றவராக அறிவிக்கப்பட்டார். இதை இத்தாலி வீராங்கனை கரினியால் ஜீரணிக்க முடியவில்லை. தனது எதிர்ப்பை தெரிவித்தார்.

போட்டிக்கு பின்பு பேசிய இத்தாலி வீராங்கனை கரினி, "ஆணுக்கு எதிராக வலுக்கட்டாயமாக சண்டையிட வைத்தது நியாயமற்றது" என்று தனது ஆதங்கத்தை தெரிவித்தார்.

இதனையடுத்து இப்போட்டி பாரீஸ் ஒலிம்பிக்கில் பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

கடந்த வருடம் நடைபெற்ற உலக சம்பியன்ஷிப் போட்டியின்போது அல்ஜீரிய வீராங்கனை கெலிஃப் மற்றும் 2 முறை உலக சாம்பியனான சீன தைபே வீராங்கனை லின் யுடிங் ஆகியோர் பாலின தகுதி பரிசோதனையில் தோல்வியடைந்ததாக அறிவிக்கப்பட்டு தொடரில் இருந்து தகுதி நீக்கம் செய்யப்பட்டனர்.

ஆனால் சர்வதேச ஒலிம்பிக் கமிட்டி நடத்திய சோதனையின் அடிப்படையில் இவர்கள் இருவரும் பெண்கள் தான் என உறுதி செய்யப்பட்டு ஒலிம்பிக் போட்டிகளில் பங்கேற்கும் தகுதியை பெற்றனர்.

இந்நிலையில் இந்த விவகாரம் தொடர்பாக சர்வதேச ஒலிம்பிக் கமிட்டி விளக்கம் அளித்துள்ளது.

அதில், "ஒவ்வொரு வீரருக்கும் பாரபட்சமின்றி விளையாட்டைப் பயிற்சி செய்ய உரிமை உண்டு. கெலிஃப் மற்றும் யூடிங் இருவரும் தங்களை பெண்களாக அடையாளப்படுத்திக் கொள்கின்றனர்.


விளையாட்டு வீரர்களின் பாலினம் மற்றும் வயது அவர்களின் பாஸ்போர்ட்டில் உள்ள தகவல்களின் அடிப்படையில் அமைந்துள்ளது. அனைத்து மருத்துவ விதிமுறைகளுக்கு இணங்கி தான் குத்துச்சண்டை போட்டியில் வீரர்கள் பங்கேற்றுள்ளனர்.

2023 ஆம் ஆண்டு உலக குத்துச்சண்டை சாம்பியன்ஷிப் போட்டியில் இருந்து அவர்கள் திடீரென தகுதி நீக்கம் செய்யப்பட்டனர். சர்வதேச குத்துச்சண்டை சங்கத்தின் தன்னிச்சையான முடிவால் இந்த 2 வீராங்கனைகளும் பாதிக்கப்பட்டவர்கள்.

பாரிஸ் 2024 ஒலிம்பிக்கில் பங்கேற்றுள்ள இந்த 2 வீராங்கனைகள் பற்றிய தவறான தகவல்களை நாங்கள் பார்த்து வருகிறோம். பெண்கள் பிரிவில் இந்த 2 வீராங்கனைகளும் பல ஆண்டுகளாக சர்வதேச குத்துச்சண்டை போட்டிகளில் பங்கேற்று வருகின்றனர். .

ஒலிம்பிக் போட்டிகளில் பங்கேற்கும் அனைத்து விளையாட்டு வீரர்களின் மனித உரிமைகளைப் பாதுகாப்பதில் நாங்கள் உறுதியாக உள்ளோம். இந்த 2 குத்துச்சண்டை வீராங்கனைகளும் தற்போது எதிர்கொள்ளும் அவதூறுகளை பார்த்து நாங்கள் வருத்தம் அடைகிறோம்" என்று சர்வதேச ஒலிம்பிக் கமிட்டி தெரிவித்துள்ளது.

# அதிக வெப்பம் எதிரொலி: இந்திய போட்டியாளர்களுக்கு ஏசி அனுப்பிய விளையாட்டுத்துறை



பிரான்ஸ் தலைநகர் பாரீசில் ஒலிம்பிக் போட்டிகள் நடந்து வருகிறது. துப்பாக்கிச் சுடுதலில் இந்தியா 3 வெண்கலப் பதக்கங்களைக் கைப்பற்றி உள்ளது.

பாரீஸ் ஒலிம்பிக் போட்டியில் இந்தியா சார்பில் 117 விளையாட்டு வீரர், வீராங்கனைகள் பங்கேற்று விளையாடி வருகின்றனர். இந்திய வீரர்கள் தங்குவதற்கு வசதியாக பாரிஸில் ஒலிம்பிக் கிராமம் கொடுக்கப்பட்டுள்ளது.

சில விளையாட்டு வீரர்கள் தங்குவதற்கு ஓட்டல்களை தேடவேண்டிய சூழல் ஏற்பட்டுள்ளது. சில விளையாட்டு வீரர்கள் வெப்ப அலைக்கு ஏற்ப தங்களது சொந்த உபகரணங்களை கொண்டுவர முடிவு செய்துள்ளனர்.

இந்நிலையில், பிரான்சில் உள்ள இந்தியத் தூதரகம் இந்திய விளையாட்டு வீரர்களுக்காக ஒலிம்பிக் கிராமத்திற்கு 40 ஏ.சி.களை வழங்கியுள்ளது.

இதனால் இந்திய வீரர்கள் வசதியாக தங்குவதற்கும், ஓய்வு நேரத்தை அனுபவிக்கவும் முடியும். ஏ.சி.களுக்கான செலவை விளையாட்டு அமைச்சகம் ஏற்றுக்கொண்டுள்ளது.

# நடந்து முடிந்த டி20 உலகக்கோப்பை கிரிக்கெட் தொடரில் ரோகித் சர்மா





நடந்து முடிந்த டி20 உலகக்கோப்பை கிரிக்கெட் தொடரில் ரோகித் சர்மா தலைமையிலான இந்திய அணி சாம்பியன் பட்டம் வென்றது. இந்த தொடருடன் இந்திய அணியின் பயிற்சியாளராக செயல்பட்டு வந்த ராகுல் டிராவிட்டின் பதவிக்காலமும் முடிவுக்கு வந்தது. இதையடுத்து இந்திய அணியின் புதிய தலைமை பயிற்சியாளராக கவுதம் கம்பீர் நியமிக்கப்பட்டார்.

இந்நிலையில், இங்கிலாந்தின் தலைமை பயிற்சியாளர் பதவியின் இருந்து மேத்யூ மோட் விலகியதை அடுத்து, அப்பதவிக்கு ராகுல் டிராவிட்டை நியமிக்கலாம் என்று இங்கிலாந்து அணியின் முன்னாள் கேப்டன் இயான் மோர்கன் ஆலோசனை வழங்கியுள்ளார்.

ஸ்கை ஸ்போர்ட்ஸ் சேனலுக்கு பேட்டியளித்த இயான் மோர்கன், "என் பார்வையில், இந்த நேரத்தில், இங்கிலாந்தின் தலைமை பயிற்சியாளர் பதவிக்கு ராகுல் டிராவிட், ரிக்கி பாண்டிங், ஸ்டீபன் ஃப்ளெமிங் மற்றும் பிரண்டன் மெக்கல்லம் ஆகியோரிடம் நீங்கள் செல்வீர்கள் என்று நான் நம்புகிறேன்.

அதிலும் குறிப்பாக மெக்கல்லம் என்று நான் சொல்கிறேன். ஏனென்றால் அவர் உலகின் சிறந்த பயிற்சியாளர்களில் ஒருவர் என்று நான் நம்புகிறேன்" என்று தெரிவித்தார்.



இரத்தலின் இன்னாது மன்ற நிரப்பிய
தாமே தமிய ருணல்

விளக்கம்:

பொருளின் குறைபாட்டை நிரப்புவதற்க்காக உள்ளதைப் பிறர்க்கு ஈயாமல் தாமே தமியராய் உண்பது வறுமையால் இறப்பதை விடத் துன்பமானது.

# ஒலிம்பிக்கில் பதக்கம் பெறும் வீரர்களுக்கு விண்ட்சர் கார் பரிசு: பிரபல தொழிலதிபர் அறிவிப்பு



பிரான்ஸ் தலைநகர் பாரீசில் ஒலிம்பிக் போட்டிகள் நடந்து வருகிறது. இதில் இந்தியா சார்பில் 100க்கும் மேற்பட்ட வீரர், வீராங்கனைகள் பங்கேற்று விளையாடி வருகின்றனர்.

இந்திய அணி இதுவரை 3 வெண்கலப் பதக்கம் பெற்றுள்ளது. மனு பாக்கர் மற்றும் ஸ்வப்னில் குசாலே ஆகியோர் தனிநபர் பிரிவிலும், கலப்பு இரட்டையர் பிரிவில் மனு பாக்கர், சரப்ஜோத் சிங் வெண்கலம் பெற்றுள்ளனர்.

இந்நிலையில், இந்தியாவின் பிரபல ஜேஎஸ்டபிள்யூ குழுமத்தின் தலைவர் சஜ்ஜன் ஜிண்டால் எக்ஸ் சமூக வலைதளத்தில் வெளியிட்டுள்ள செய்தியில், ஒலிம்பிக்கில் பதக்கம் வெல்லும் ஒவ்வொரு இந்திய வீரர்களுக்கும் கார் பரிசாக வழங்கப்படும் என அறிவிப்பதில் மகிழ்ச்சி அடைகிறேன். நமது சிறந்த வீரர்கள் அவர்களின் அர்ப்பணிப்பு மற்றும் வெற்றிக்காக சிறப்பானதை பெறுவதற்கு தகுதியானவர்கள் என பதிவிட்டுள்ளார்.

சஜ்ஜன் ஜிண்டாலின் இந்த பதிவுக்கு சமூக வலைதளங்களில் பலரும் பாராட்டு தெரிவித்து வருகின்றனர்.

பிரபல தொழிலதிபர் சஜ்ஜன் ஜிண்டாலின் ஜேஎஸ்டபிள்யூ குழுமத்துடன் இணைந்து மோரிஸ் காரேஜஸ் இண்டியா என்ற நிறுவனம், எம்ஜிவிண்ட்சர் என்ற சொகுசு காரை தயாரித்து வருகிறது குறிப்பிடத்தக்கது.

நமது தினகனி
செய்திகள் மற்றும்
விளம்பரங்கள் தொடர்புக்கு:
94436 99066
namadhudhinakani@gmail.com
www.dhinakani.com
Canara Bank Account : 120028528266
IFSC code : CNRB0001041

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 63815.1. Editor: KANI RAJA V.